sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

MATERIAL INTELLIGENCE

# DANCE IN THE DESTRUCTION DANCE

## அழிவு நடனத்தில் நாட்டியம்


“உலகைப் பற்றிய நம் அனுபவம், நம் உணர்வுகளின் பொருள் விளக்கமும் நம் மனக்காட்சியும் ஆகும்.“
ஜூ சூன் லின்

ஜூ சூன் லின்னைப் பொறுத்தவரை, பௌதிக உலகு பற்றிய நம் அனுபவத்தை முழுமையடையச் செய்வதற்கு பார்வை, ஒலி, கேட்டல், தொடுதல் ஆகிய புலன்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். இக்கலைஞரின் செயலாக்க முப்பரிமாணக் கலைப்படைப்புகள் நம்மைச் சுற்றியுள்ள உலகை செயற்பாடு, நிகழ்வு, நகர்வு ஆகியவையாகக் கற்பனை செய்யும் மனிதர்களின் வழக்கமான கருத்துகளுக்குச் சவால் விடுக்கின்றன.

அழிவு நடனத்தில் நாட்டியம் ஜூவினால் வடிவமைக்கப்பட்ட ஒரு வளிமண்டலச் சுற்றுப்புறம். அது உங்கள் கண்ணிமைகளை ஒன்றாக ஒட்டிக்கொள்ளுங்கள் (2017/2023), நான் பணத்துடன் மட்டுமே நட்புறவு கொள்வேன் (2012/2023), அதிசயப் பரிமளம் (2020/2023) ஆகிய கலைப்படைப்புகளை உள்ளடக்கிய ஒரு நிகழ்கலை வெளியும் முப்பரிமாண அமைப்பும் ஆகும். ஜூவின் பல்லுணர்வுச் சுற்றுப்புறம், ப்ளாஸ்டிக், மரம், உலோகம் போன்ற பொருள்கள் எப்படி நம் சமகால உலகில் தொடர்ந்து தங்கள் வடிவத்தையும் தோற்றத்தையும் அர்த்தத்தையும் மாற்றிக் கொள்கின்றன என்பதில் கவனத்தை ஈர்க்கும் வகையில் கதை சொல்வதற்கான கருவியாகவும் உள்ளது.

இந்த முப்பரிமாண அமைப்பு யதார்த்தத்துக்கும் தோற்றத்திற்கும் இடையிலான வேறுபாட்டை ஆராய பொருள்களின் சிற்பங்கள், வீடியோ, நிகழ்கலை ஆகியவற்றின் பரிசோதனைப் பயன்பாட்டை ஒன்று சேர்க்கிறது; முன்னது அறியப்பட்டது, பின்னது உணரப்படக் கூடியது. இந்தக் கலைப்படைப்புகள், *pEARs ' --- --- --- ' in §pring* (2018/2023) என்னும் தலைப்பிலான இரண்டு பாக நாடக நிகழ்ச்சியின் வழி செயற்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சியின்போது, அரங்க வெளி, மேடை அமைப்புக்கும் முப்பரிமாண அமைப்புக்கும் இடையே மாறும். அங்கு பல்வேறு பயன்பாடுகளுக்காகப் பொருள்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கும். கலைஞரால் எழுதப்பட்ட இந்த மேடை நிகழ்ச்சி, வடிவங்களின் மாற்றங்களை எடுத்துக்காட்டுவதோடு கண்காட்சியின் கதையையும் வடிவமைக்கிறது. அன்றாடப் பொருள்கள் மற்றும் சமகாலத் தொழில்நுட்பத்தின் மூலம் நாம் நம்முடைய விழிப்புநிலையின் எல்லைகளை நீட்டிக்க முடியும் ஆர்வத்தினால் கலைஞர் உந்தப்படுகிறார்.

ஜூ சூன் லின் (பி.1984), சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட ஒரு காட்சிக் கலைஞர் மற்றும் கவிஞர். விழிப்புநிலைக்கும் பிரிதிநித்துவத் தொழில்நுட்பத்துக்கும் இடையிலான உறவை ஆராய்பவர். இந்தக் கண்காட்சி, இன்று கலைஞர்கள் எவ்வாறு கைவினை மற்றும் தொழில்துறையுடன் தொடர்புடைய உருவாக்க முறைமைகளை நம் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப வருங்காலம் பற்றிய ஊகங்களுடன் இணைக்கின்றனர் என்பதை ஆராயும் சிங்கப்பூர் கலை அரும்பொருளத்தின் பொருள்சார்ந்த அறிவுத்திறன் கண்காட்சித் தொடரின் ஒரு பகுதி ஆகும்.




## *உங்கள் கண்ணிமைகளை ஒன்றாக ஒட்டிக்கொள்ளுங்கள்*

2017/2023
பலூன்கள், துத்தநாகம் பூசிய எஃகு, நுரைப்பஞ்சு, சிமிண்ட் இழையமைப்புப் பூச்சுடன் கூடிய மரம், எஃகுச் சட்டகம், ஒற்றை ஒளிவழிக் காணொளி (சுமார் 4.40 நிமிடம்)

காட்சி பொருள்கள் ① & ②

*உங்கள் கண்ணிமைகளை ஒன்றாக ஒட்டிக்கொள்ளுங்கள்-இல்*, ஜூ, நேரம் செல்லச் செல்ல வடிவத்தை மாற்றிக்கொள்ளும் “நேரத்தை அடிப்படையாகக் கொண்ட” சிற்பத்தை உருவாக்கியிருக்கிறார். இந்தச் சிற்பத்தின் முக்கியக் கூறுகள் எஃகுச் சட்டகம் ஒன்றில் பிணைக்கப்பட்டுள்ளன. அதில், மேல் பாதியில் சிமிண்ட் இழையமைப்புப் பூச்சுடன் கூடிய மரத்தினாலும் கீழ்ப் பாதியில் நுரைப் பொருளாலும் (foam) செய்யப்பட்ட இரண்டு தொகுதி “பாறைப் பலகைகள்” உள்ளன. நான்கு பாறைப் பலகைகளும், ஊதப்பட்ட பலூன்களாலும் மனித நரம்பு மண்டலத்தைப் பிரதிநித்ப்பதாகக் கூறப்படும் துத்தநாகம் பூசிய எஃகுச் சங்கிலியாலும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. நேரம் செல்லச் செல்ல பலூன்களில் காற்று இறங்கும்போது, கீழே உள்ள பாறைப் பலகைகள் எடை தாங்காது மெதுவாகத் தரையில் விழுகின்றன. சிற்பம் படிப்படியாக உருமாறுவது, நம் அன்றாட அனுபவங்களை வடிவமைக்கும் தொழில்துறைப் பொருள்களின் வாழ்க்கைச் சுற்றுப் பற்றி நமக்கு உணர்த்துவதாக உள்ளது. அங்கு “வாழ்க்கையும்“ “இறப்பும்“ என்ன என்பது நாம் அதில் நம்பிக்கை கொண்டிருந்தால் மட்டுமே உண்மையாக இருக்கும்.

உங்கள் கண்ணிமைகளை ஒன்றாக ஒட்டிக்கொள்ளுங்கள் படைப்பின் மற்றொரு மாறுபட்ட பதிப்பு ஆசிய திரைப்படக் காப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இயக்க நிலை 2017: அந்நியமான கண்களின் வழியே (2017) என்னும் கண்காட்சியில் படைக்கப்பட்டது.

## *pEARs '--- ---' in §pring*

2023, 13 ஜனவரி 2023இல் நடைபெற்ற நிகழ்ச்சியின் காணொளி ஒளிப்பதிவுடன்.
தொழில்துறைப் பொருட்கள் மற்றும் இணைப்பு வன்பொருட்களால் அமைந்த மூன்று பொருட்சிற்பங்கள், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட பீடங்களில் இரண்டு அலுமினியப் பாத்திரங்கள், உருளை அமைப்பில் அக்ரிலிக் சிற்பம், அச்சிடப்பட்ட ஒளி ஊடுருவக்கூடிய ஃபிலிம்கள், இரு ஒற்றை ஒளிவழிக் காணொளிகள் (சுமார் 2:00 நிமிடம் மற்றும் 22:00 நிமிடம்) ஆகியவை அடங்கிய முப்பரிமாணப் படைப்பு

காட்சி பொருள்கள் ③ ④ ⑤ ⑥ ⑦ ⑧ ⑨ & ⑪

*pEARs ' --- --- --- ' in §pring* என்பது, இக்கலைஞர் “திரைப்படப் பொருள்கள்” மற்றும் பாத்திரச் சிற்பங்கள் என்று கூறும் தனிச் சிற்பங்களைக் கொண்ட ஒரு முப்பரிமாணப் படைப்பு. இந்தத் திரைப்படப் பொருள்கள், தாழ்ப்பாள்கள், கதவுக்கீல்கள், மடிக்கக்கூடிய கால்கள், கால்சக்கரங்கள் முதலிய தொழில்துறைப் பொருட்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. இவை ஊடாடக்கூடியவை. மாற்றியமைக்கப்பட்டு அந்த இடத்தைச் சுற்றி நகர்த்தப்படக்கூடியவை. அது அர்த்தம் அனைத்தும் எப்படி ஒன்றையொன்று சார்ந்திருத்தல் மற்றும் தொடர்ச்சியான புதுப்பித்தலின் வழி உருவாக்கப்படுகிறது என்பதைச் சுட்டுகிறது. இந்தத் திரைப்படப் பொருள்களுக்கு அருகில் சிறிய, மேடைப்பொருள்கள் போன்ற, இதே பொருட்களால் செய்யப்பட்ட பாத்திரச் சிற்பங்கள் உள்ளன. 13 ஜனவரி 2023இல் கண்காட்சி திறக்கப்பட்ட நாளன்று, கலைஞரால் அரங்கேற்றப்பட்ட மேடை நிகழ்ச்சி ஒன்றின் வழி இவை செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஜூவினால் எழுதப்பட்ட இந்த நிகழ்ச்சி கலைப்படைப்புகள் காலப்போக்கில் புதிய அர்த்தங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்தும் துடிப்பு மிக்கவையாக எப்படி விளங்குகின்றன என்பதைக் கூற பேச்சு மொழியையும் நேரில் தோன்றும் நடிகர்களையும் பயன்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சியின் சுவடுகள் வீடியோக் காட்சியில் அடங்கியிருக்கின்றன. இந்தக் காட்சிகள் மின்னிலக்கக் கேமராக்கள், செயல்களின் அணுக்கக் காட்சிகள், திரைப்படப் பொருள்களின் அசைவூட்டப் படங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்பட்டன. இது சிங்கப்பூர்க் கலை அரும்பொருளகத்தில் படைப்பின் அனுபவம் சார்ந்த ஆவணமாக உள்ளது.

இரண்டாவது மேடை நிகழ்ச்சி 25 மார்ச் 2023இல் மாலை 6-7 மணிக்கு நடைபெறும். இந்த மேடை நிகழ்ச்சி மற்றும் முப்பரிமாணப் படைப்பின் மற்றொரு படைப்பு 2018இல் அமெரிக்காவில், FOGSTAND கேலரி மற்றும் ஸ்டுடியோவில் அரங்கேற்றப்பட்டது.

## *அதிசயப் பரிமளம்*

2023
மடிக்கப்பட்ட தார்ப்பாய், ஃபோம் பலகை, காணொளி (சுமார் 22 நிமிடம்) அச்சிடப்பட்ட ஒளிபுகக்கூடிய மென்தகடு ஆகியவற்றைக் கொண்ட முப்பரிமாணப் படைப்பு

காட்சி பொருள்கள் (10) & (11)

நாம் அனுபவிக்கும் அனைத்தும் நம் உணர்வுகள் நமக்குச் சொல்பவற்றை அர்த்தப்படுத்திக் கொள்வது மட்டும்தானா? *அதிசயப் பரிமளம்* வடிவத்தின் தன்னியல்புத் தன்மையை ஆராயும் தார்ப்பாய்ச் சிற்பங்கள். ஜூ, தார்ப்பாலின் பாய்களை முடிவேயில்லாமல் மடித்தும் பிரித்தும் பல இரு பரிமாண வடிவங்களையும் கட்டமைப்புகளையும் உருவாக்குகிறார். மடிக்கும் வரிசை முன்னேற்பாடில்லாத சைகைகளுக்கு ஏற்ப நிகழ்த்தப்படுகிறது. ஒவ்வொரு தார்ப்பாயிலும் செயற்கைப் பசைப் பொருள் மீதான முத்திரைப் பொறிப்புகளுடனான கலைஞரின் பரிசோதனைகள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த பிம்பங்கள் ஒவ்வொன்றும் எண்ணற்ற மாறுபாடுகளை உருவாக்கக்கூடிய ஒற்றை நிகழ்வுகளைப் பதிவு செய்கின்றன.

இந்தப் படைப்பின் வெவ்வேறு பதிப்புகள் சிங்கப்பூரில் 2020இல், த சப்ஸ்டேஷனிலும் பின்னர் Tzu Chi ஹ்யுமானிஸ்டிக் யூத் செண்டரிலும் காட்சிப்படுத்தப்பட்டன. இப்போது இது இந்தக் கண்காட்சிக்காகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## *நான் பணத்துடன் மட்டுமே நட்புறவு கொள்வேன்*

2023
பிசுபிசுப்பான செயற்கைப் பொருள், காங்க்ரீட் பூச்சுடன் கூடிய மரம், நாணயங்கள்

காட்சி பொருள்கள் (12)

சமகாலத் தொழில்நுட்பம் வளர்ந்துவரும் அதே வேளையில் தோற்றம் மற்றும் யதார்த்தம் சார்ந்த நம் புரிதலும் மாறுகிறது. *நான் பணத்துடன் மட்டுமே நட்புறவு கொள்வேன்* ஓர் ஊடாடும் சிற்பம். இங்கு வருகையாளர்கள் கிணற்றினுள் நாணயங்களை எறிந்து அது பிசுபிசுப்பான ஒரு பொருளால் விழுங்கப்படுவதைக் காணுமாறு அழைக்கப்படுகிறார்கள். கிணறு அல்லது நீரூற்று ஒன்றினுள் நாணயத்தை எறிந்து வேண்டிக்கொள்ளும் வழக்கம் காலங்காலமாக உள்ள ஒன்று. இதில் அந்தப் பணம் படிப்படியாக விழுங்கப்பட்டு காலவோட்டத்தில் கரைந்து போகிறது. எஞ்சியிருப்பதெல்லாம் அந்த வேண்டுதல் பற்றிய நினைவும் அது நிறைவேறவேண்டும் என்ற ஆசையுமே. இந்தப் படைப்பு, வடிவங்களின் உருமாற்றம் எப்படி மனிதர்களின் மனத்துடன் தொடர்புகொண்டிருக்கிறது என்பதை ஆராய்வதற்கான கருவிகளாக பொருள்களின் உள்ளார்ந்த பண்புகளைப் பயன்படுத்தும் கலைஞரின் ஆரம்பகாலப் பரிசோதனையாகும்.

இந்தப் படைப்பு முதலில் சிங்கப்பூர் Biennale 2013இல் காட்சிக்கு வைக்கப்பட்டது. பிறகு 2014இல் கானாடாவின் அல்பெர்ட்டாவில், Banff Centre for Arts and Creativity-இல் காட்சிக்கு வைக்கப்பட்டது.

**வருகையாளர்கள் பிசுபிசுப்பான பொருளுக்குள் நாணயத்தை எறியுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.**

இந்தப் படைப்பில் சேகரிக்கப்படும் நாணயங்கள் கலைஞர் விரும்பும் அறநிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்கப்படும்